## பினாங்கு ரோமன் கத்தோலிக்க மறைமாவட்டம் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களிடமிருந்து மேய்ப்புப் பணி மடல் (மறையுரை)

திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை 3-ஆம் டிசம்பர் 2017ஆம் திகதி வழங்கப்படும்

அன்பார்ந்த இறைமக்களே,

" மூவொரு இறைவனான தந்தை, மகன், தூய ஆவியார் ஆகியோரிடமிருந்து மகிழ்ச்சி, இரக்கம் மற்றும் நம்பிக்கை உரித்தாகுக."

2017ம் ஆண்டவரின் ஆண்டில் நாம் பெற்றுக் கொண்ட சகல அருள் மற்றும் ஆசீர்வாதங்களுக்காக இத்திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை நாம் இறைவனுக்கு நன்றியும் புகழும் செலுத்துவோமாக. அத்துடன் 2018ம் புதிய திருவழிப்பாட்டு ஆண்டை ஆரம்பிக்கவிருக்கும் நாம், புதிய வாய்ப்புக்களையும் கிருபைகளையும் பெற்றிட நம்பிக்கை கொள்வோமாக. நமது எதிர்நோக்கும் மீட்பருமாக விளங்கும், ஆண்டவரின் இறுதி வருகைக்காக காத்திருக்கும் வேளையே திருவருகைக்காலமாகும். இத்தகைய எதிர்நோக்கும் மீட்பும் இன்று அவசரமாக தேவைப்படுவதுபோல ஒருபோதும் தேவைப்பட்டதில்லை. " அதுபோலவே நீங்களும் விழிப்பாய் இருங்கள், ஏனெனில் வீட்டுத்தலைவர் எப்போது வருவார் என உங்களுக்கு தெரியாது." (மாற் 13:35)

எமது மக்களே, நமது உலகம் **" உலகளாவிய காலநிலை நெருக்கடிக்கு"** உள்ளாகியுள்ளது. இது " உலகளாவிய தட்பவெப்ப அவசர நிலை" எனவும் அழைக்கப்படுகிறது. புவி வெப்பமயமாதலின் காரணமாக சீதோஷ்ண நிலையில் மாற்றம் ஏற்பட்டு, பூமியில் வாழும் எல்லா உயிரினங்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன. 2016ம் ஆண்டு மிகவும் வெப்பமான வருடமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. துருவப் பனி நிலைகள் உருகிக்கொண்டிருக்கின்றன. கடல் மட்டம் உயர்ந்து கொண்டிருக்கின்றன. சமுத்திரம் அமிலமயமாக்கப் படுவதால் பவளங்கள் கொல்லப்படுகின்றன மற்றும் மீன் வளங்கள் குறைந்து போகின்றன. பயிர்கள் குறைவாக உற்பத்தி செய்யயப்படுகின்றன. வெப்ப அலைகளும் கால நிலை பேரழிவுகளும் அதிகரித்து கொண்டு வருகின்றன. 2012ம் ஆண்டில், பருவ நிலை மாற்றங்களால் 400,000 மக்களுக்கு மேலாக மடிந்து போயினர். இது வேகமாக வளர்ந்துவரும் ஒரு எண்ணிக்கையாக விளங்குகிறது. வெள்ளம், புயல், காட்டுத் தீ மற்றும் தீவிர வெப்பம் போன்ற தட்பவெப்ப நிலை காரணங்களினால் 2008ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் சராசரி 21.5 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர். ஹைத்தி, வியட்நாம், சீனா, பிலிப்பைன்ஸ், மெக்சிக்கோ மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் நிகழ்ந்த கடுமையான சீரழிவுகளை நாம் பார்த்திருக்கிறோம். நமது சொந்த மறைமாவட்டத்தில் இத்தகைய தட்பவெப்ப நிலை பாதிப்பை நாமும் அனுபவித்திருக்கின்றோம். காலநிலை மாற்றங்கள் ஏழைகளுக்கு மிகவும் சிரமத்தை கொடுக்கின்றது.

அபாயகரமான கால நிலை மாற்றம் ஏற்கனவே நிகழ்ந்துக்கொண்டிருக்கிறது. மாறாக, தனிப்பட்ட, குடும்ப மற்றும் சமுதாயம், சுற்றுச்சூழல் தூய்மையாக்கலில் பங்கெடுப்பதின் வாயிலாக, காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பேரழிவை நம்மால் தவிர்க்கமுடியும். கடந்த 2015ல் டிசம்பர் மாதத்தில் புவிவெப்பமயமாவதை 2 செல்சியஸ் பாகைக்கு குறைவாகவும் தொழில்துறைக்கு முந்திய அளவுகளான 1.5 செல்சியஸ் பாகைக்கு மேலாக வெப்பநிலையை கட்டுப்படுத்தும் முயற்சியை தொடரப்போவதாக உலகத் தலைவர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர். நாம் ஒன்றுமே

செய்யவில்லை என்றால், *2100-ஆம் ஆண்டிற்குள் புவியின் வெப்ப அதிகரிப்பு 4.8 - 7.8 செல்சியஸ் பாகை வரை உயரும். இது பூமியில் வாழும் உயிரினங்களுக்கு பேரழிவை கொண்டுவரும். நமக்கு தெரிந்த வரை உலகம் வேகமாக கடந்து சென்று கொண்டிருக்கிறது. நமது பிள்ளைகளுக்கு கணிக்க இயலாத விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய, முற்றிலும் ஒரு வேறுபாடான கிரகத்தை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகையால், மனித வரலாற்றில் மிகவும் சர்ச்சைக்குரிய நிலமைக்கு உலகம் உள்ளாகிக் கொண்டிருக்கிறது.*

“ லௌடாட்டோ சீ (LS): நமது பொது இல்லத்திற்கான கவனிப்பு சுற்று மடலை” பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் 2015ம் ஆண்டு ஜுன் மாதம் வெளியிட்டார். உலகளாவிய நெருக்கடியின் அவசரப் பிரச்சனை குறித்து முழு உலகையும் உரையாடுவதற்கு முன்னெடுத்துச் சென்ற பாப்பரசரை உலகெங்கிலும் உள்ள மக்கள் பாராட்டினார்கள். “ *இவ்விஷயங்கள் இப்பொழுது ஒரு முறிவு எல்லையை எட்டியுள்ளது*” (LS61) என பாப்பிறை மேற்கோள் காட்டியுள்ளார். “ *எல்லாவற்றிற்கு மேலாக திருச்சபை சுய அழிவிலிருந்து மனிதகுலத்தை பாதுகாக்க வேண்டும்*” என பாப்பரசர் நமக்கு தெள்ளத்தெளிவாக உறுதிபட கூறியுள்ளார். (LS79)

எஞ்சியுள்ள படைப்புக்களுக்கு நாம் சொந்தக்காரர் என்றில்லாமல், கண்காணிப்பாளர் என்ற முறையில், அக்கறை காட்டுவதில் பொறுப்புள்ளவர்களாக விளங்க வேண்டுமென, இறைவார்த்தை நமக்கு தெள்ளத்தெளிவாக நினைவுறுத்துகிறது. மேலும் தற்போதைய கால நிலை நெருக்கடி உண்மையானது, அத்துடன் மனித செயல்நடவடிக்கைகளின் சுயநலம் மற்றும் அலட்சியப்போக்கின் காரணங்களினால் பூமியில் வாழும் எல்லா உயிரினங்களும் அச்சுறுத்தபடுகின்றன என்ற உலகளாவிய ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் நிலைப்பாட்டை உங்கள் ஆயர் என்ற முறையில் உங்களுக்கு தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

உலகின் இப்போதைய சூழ்நிலைக்கும் இன்னும் வெளிப்படாத எதிர்கால நிலமைக்கும் நாம் அனைவரும் பதிலளிக்கும் பொறுப்பாளர்களாக இருக்கிறோம். பாழ்ப்படுத்துவது நமது மரபாக விட்டுச்செல்ல வேண்டாம். “ *இந்த உலகில் நமது வாழ்வின் நோக்கம் என்ன? நாம் ஏன் இங்கு இருக்கிறோம். நமது பணி மற்றும் எல்லா முயற்சிகளின் இலக்கு என்ன? நம்மிடம் இருக்கின்ற இப்பூமியின் தேவைகள் என்ன? நான் எனது எதிர்கால தலைமுறைகள் குறித்து அக்கரை கொள்பவனாக இருக்கிறேன் என இனி வெறுமென கூறுவது மட்டும் போதாது.* ***நமது சுய கௌரவம், இறைவனுடைய படைப்பின் மாண்பு ஆகியவற்றில் எதை நாம் பணயம் வைக்கப்போகிறோம் என்பதை நாம் பார்க்க வேண்டும்.*** *வருங்கால தலைமுறைகள் வாழக்கூடிய ஒரு கிரகமாக விட்டுச் செல்வது முதல் முக்கியமாக, நம்மை பொறுத்ததாகவே உள்ளது. எனவே இந்த பிரச்சனையானது, நமது சிறிது கால மண்ணக வாழ்விற்கு இறுதி அர்த்தத்தை கொண்டுள்ளதால், அது நம்மை வியத்தகு முறையில் பாதிக்கின்றது.* (LS 160)”

அன்பார்ந்த இறைமக்களே, இதனை அடுத்து நமக்கு என்ன தேவைப்படுகிறது? நமது பாப்பரசர் “ சுற்றுச்சூழல் மனமாற்றத்திற்கு” நம்மை அழைக்கின்றார். அதாவது, “ இயேசு கிறிஸ்துவோடு நாம் கொண்ட சந்திப்பின் விளைவு நம்மைச் சுற்றியுள்ள உலகத்தினருடன் கொண்ட உறவுக்கு சாட்சியாக விளங்குகின்றது” (LS 217). “ பூமியின் கூக்குரல் மற்றும் ஏழைகளின் அழுகுரல் ஆகிய இரண்டையும் கேளுங்கள்” என பாப்பிறை நம்மை அழைக்கின்றார். “ புண்ணிய வாழ்விற்கு மிக இன்றியமையாதது என்னவெனில்; இறைவனின் கைவேலைகளுக்கு பாதுகாப்பாளர்களாக இருப்பதே; நமது இறை அழைத்தலின் வாழ்வாக இருக்கின்றது; இது நமது விருப்பத்திற்கு விடப்பட்ட ஒன்றைல்ல அல்லது நமது கிறிஸ்துவ அனுபவத்தின் இரண்டாம் தர அம்சமுமல்ல. (LS 217)” என திருத்தந்தை வலியுறுத்திக் கூறுகின்றார்.

“ சுற்றுச்சூழல் மனமாற்றம்” நமது வாழ்க்கை முறை மாற்றத்திற்கு அழைப்பு விடுக்கின்றது. இதன் அர்த்தம் என்னவென்றால் உலகின் உண்மையான உருமாற்றம் இல்லை என்றில்லாமல், நம் ஒவ்வொருவரின் உள்ளத்திலிருந்து வரவேண்டும் என்பதாகும். நமது விருப்பத்திற்கு மேலாக தியாகத்தையும், பேராசைக்கு மேலே பகிர்வையும், மற்றும் வசதிக்கு மேலாக எல்லா படைப்புக்களின் பொது நன்மைக்கு பணி செய்வதையே நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கடந்த ஆண்டு 4வது தீபகற்ப மலேசிய மேய்ப்புப்பணி மாநாட்டிற்கு பிந்திய மேய்ப்புப்பணி அறிக்கையில், தீபகற்ப மலேசிய திருச்சபை பேராயரும் ஆயர்களும் வலியுறுத்திக் கூறியதாவது: “ தனிப்பட்ட, ஆன்மீக, அரசியல், நிதி, ***சுற்றுச்சூழல் தூய்மையாக்கல்*** - ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முழுமையான மனப்பான்மையின் அடிப்படையில், உருவாக்கப்பட்ட ஒரு தேசத்தை கட்டி எழுப்புவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் - எனவே, இன்னும் கூடுதலான ஒருங்கிணைந்த மலேசியாவைக் காண விரும்பும் அனைத்து மலேசியர்களுடன், இணைந்து ஈடுபாட்டுடன் செயல்படுவோமாக.”

மீண்டும் மீளும் தன்மையுடைய பூமியையும் சமூகங்களையும் உருவாக்கிட, மனிதன் மற்றும் இயற்கையை உள்ளிட்ட எல்லா **படைப்புக்களுக்கும் படைப்பு நீதியை உறுதிபடுத்த வேண்டும்**, (4வது தீபகற்ப மலேசிய மேய்ப்புப்பணி மாநாட்டில் வெளிப்பட்ட) *“ படைப்புத்திறன் மனநிலை, எல்லோரையும் உட்சேர்த்தல், பாலம் கட்டுதல்”* ஆகிய கருத்துக்களை செயல்படுத்த நாம் விரும்புகிறோம், படைப்பு நீதி மற்றும் மீட்டெடுக்கும் தன்மையின் சுடரொளியை எடுத்துச் செல்ல, பினாங்கு மறைமாவட்டம் உறுதி கொண்டுள்ளது. இம்மறைத்தூதுப் பணிக்காக கடந்த 2017ம் ஆண்டில் மலேசியா - சிங்கப்பூர் - புருனை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை, படைப்பு நீதி ஆணைக்குழுவை உருவாக்கினார்கள். (ஜுலை 2013-2016 வரை நீதி மற்றும் சமாதான ஆணைக்குழு என அழைகப்பட்டது). வத்திக்கானில் செயல்படும் சுற்றுச்சூழல் ஆணைக்குழுவின் கண்காணிப்பில் இக்குழு செயல்படும். இவ்வாறாக, பினாங்கு மறைமாவட்டம் உலகளாவிய பிரச்சனைகள் குறித்து, அகில உலக திருச்சபையோடு இணைந்து செயல்படுகிறது.

இந்த முக்கிய மறைத்தூதுப்பணிக்கு நீங்கள் ஒரே மனத்தவராய் மற்றும் மன நிலையிலும் செயலிலும் ஈடுபடுமாறு நான் உங்கள் ஒவ்வொருவரையும் அழைக்கின்றேன். உண்மையான சுற்றுச்சூழல் குடிமக்களாகவும், நம்பிக்கையின் சீடர்களாகவும் திகழுங்கள். அனைத்து படைப்புக்களுக்காக தொடர்ந்து அன்பு செய்து ஜெபியுங்கள்; தூய்மை கேட்டை நிறுத்துங்கள்; பயன்படுத்திய பிறகு தூக்கி எறியக்கூடிய காகித தட்டு, பிளஸ்டிக் உண்ணும் கருவிகள், மெல்லிழை தாள் (டிஸ்யூ), பிளஸ்டிக் பை ஆகியவற்றிற்கான அதிகபட்ச நுகர்வை குறைத்துக்கொள்ளுங்கள். மேலும் நீர் பராமரிப்பு, மின்சார பயன்பாடு குறைப்பு மற்றும் கூடுதல் மரங்களை நடுதல் போன்றவற்றை மேற்கொள்ளவும். **குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசூழற்சியை மேற்கொள்ளுங்கள். மேலும் உங்கள் இல்லங்களிலிருந்து உங்கள் சமுதாயங்கள், பங்குகள் மற்றும் அமைப்புக்களுக்கு ஒரு மீள் திறனுடைய சுற்றுச்சூழல் உலகத்தை உருவாக்க உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள்.** நீங்கள் யார் என்பதை நினைவில் வையுங்கள்; கடவுளின் சொந்த குழந்தைகள்; “ நீங்கள் பூமியின் உப்பாகவும் உலகிற்கு ஒளியாக இருக்கின்றீர்கள்.” (மத்தேயு 5:13-14), எல்லோருக்கும் நற்செய்தி அறிவிக்கவும், ஆழமான மற்றும் இருண்ட நெருக்கடியில் சிக்கி சிறைப்பட்டிருக்கும் ஒரு உலகை விடுவிக்க நீங்கள் திருப்பொழிவு செய்யப்பட்டிருக்கிறீர்கள். (லூக்கா 14:8, ஏசாயா 61:1). ஆகவே, ஆண்டவருக்குள் முழு மன உறுதியுடன் வெளியே சென்று அவரது மீட்பின் வல்லமைக்கு துணிச்சலான சாட்சிகளாக விளங்குங்கள்.

*" நம்முடைய எல்லாவற்றையும் தாராள ஈடுபாட்டுடன் வழங்கும்படி, உண்மையிலேயே இறைவன் நம்மை அழைக்கின்றார். நமது பயணத்தை தொடர நமக்கு வேண்டிய ஒளியையும் வலிமையையும் அவர் விரும்பி கொடுக்கின்றார். இவ்வுலகின் மையத்தில், நம்மை மிகுதியாக நேசிக்கும் வாழ்வின் ஆண்டவர், நம்மோடு எப்பொழுதும் இருக்கின்றார். அவர் நம்மை கைவிடவில்லை, அவர் நம்மை தனியாக விட்டுவிடவுமில்லை ஏனெனில் அவர் நம் பூமியில் தம்மை உறுதியுடன் இணைத்து கொண்டுள்ளார். மேலும் அவருடைய அன்பு தொடர்ந்து முன்னோக்கும் புதிய வழிகளை கண்டுபிடிப்பதற்கு நம்மை தூண்டுகிறது (LS 245).*

புனித ஜெனோவா கத்தரின்: (மனம் திரும்புதல், மனமாற்றம், பரிகாரம்) ஆகியவற்றை உள்ளடக்கிய சீர்த்திருத்தம் இல்லாத மறுமலர்ச்சி திருச்சபையின் ஊழலாக கருதப்படுகிறது.

சுற்றுச்சூழலின் பாதுகாவலரான புனித பிரான்சிஸ் அசிசியாருடன் இணைந்து, இத்திருவருகை காலத்தில் சுற்றுச்சூழல் மனமாற்றத்திற்கு நம்முடைய இதயங்களை நாம் எல்லோரும் திறக்க வேண்டுமென நான் ஜெபிக்கின்றேன். மேலும், அனைத்து படைப்புக்களுக்காகவும் உங்களோடு நம்பிக்கையுடன் முன்னோக்கி பயணிக்க நான் பெரிதும் எதிர்பார்க்கிறேன்.

ஆண்டவரே, உம் ஆவியாரை அனுப்பியருளும், பூமியின் திருமுகத்தை புதுப்பித்தருளும்.

திருச்சபை மற்றும் பூமியின் தாயாகிய மரியாளே, எங்களோடு உடனிருந்து எங்களுக்காக ஜெபிக்கவும்.

நம்பிகையின் சீடர்களாக திகழுங்கள்.



பேரருட்திரு செபஸ்தியன் பிரான்சிஸ்

பினாங்கு ஆயர்.